[திரு. துரைமுருகன்] [2022 மே 6

அவர்கள் சரபங்கா திட்டத்தை நிறைவேற்றிவிட்டார்கள். ஆனால், தஞ்சை மற்றும் டெல்டா மாவட்ட விவசாயிகள் அதற்கு மிகப் பெரிய எதிர்ப்பைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கும் அங்குள்ள விவசாயிகள் அதற்காகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை நிறுத்த வேண்டுமென்று எங்களிடம் மனுக்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் அவர்களுக்கு சமாதானம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். நானே ஒப்புக்கொள்கிறேன். அங்கிருப்பது மிகை நீர்தான். நான் இல்லையென்று சொல்லவில்லை. மிகை நீரை எடுப்பதற்குக்கூட அவர்கள் ஒப்புக்கொள்ளமாட்டேன் என்கிறார்கள். நாம், மிகை நீர் என்று சொல்கிறோம்; 'இல்லை, அது எங்கள் நீர்தான்' என்று அவர்கள் சொல்கிறார்கள்.

ஆகையினால், அவர்களை முதலில் நாம் சமாதானப்படுத்த வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். இந்தத் திட்டம் உடனடியாகச் செயல்படுத்தக்கூடிய திட்டமல்ல. அவர்களையும் திருப்தியடையச் செய்து, செய்ய வேண்டிய ஒரு பணி இது. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய யோசனையை, ஆணையைப் பெற்று, இந்தத் திட்டத்தை எப்படிச் செயல்படுத்த வேண்டுமோ, அவ்வாறு செய்து தருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சி, அசோக் நிரஞ்ஜன் நகர் பகுதி, கழிவுநீர்த் தொட்டியில் விஷவாயு தாக்கி ஒருவர் உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள். விஷவாயு தாக்கியது குறித்து, சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் வாலிபர் ஒருவர் கழிவுநீர்த் தொட்டியில் விஷவாயு தாக்கி உயிரிழந்தது குறித்து அரசின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட

2022 மே 6] [திரு. கு. செல்வபெருந்தகை]

பருத்திப்பட்டு, 47–வது வார்டு, அசோக் நிரஞ்ஜன் பகுதியில் கழிவுநீர்த் தொட்டியைச் சுத்தம் செய்யும்போது முத்துக்குமார் என்பவர் இறந்திருக்கிறார். தொடர்ந்து இதுபோன்ற நிகழ்வுகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஏற்கெனவே ஓர் ஆய்வுக் குழுவோடு நாங்கள் அங்கே சென்று பார்வையிட்டபோது, 2019 ஆம் ஆண்டு பல மரணங்கள் ஏற்பட்டுள்ளன என்பது தெரிய வந்தது.

என்னுடைய தொகுதியில், குறிப்பாக செல்வபெருமாள் நகர், கிருஷ்ணமூர்த்தி என்பவர் வீட்டில் கழிவுநீர்த் தொட்டியைச் சுத்தம் செய்யும்போது 6 பேர் அகால மரணமடைந்தார்கள். அதற்குப் பிறகு, வேலூரில் 3 பேர் இறந்திருக்கிறார்கள். கழிவுநீர்த் தொட்டியைச் சுத்தம் செய்யும்போது இப்படி பல நிகழ்வுகள் நடைபெற்று மரணம் அடைந்திருக்கிறார்கள்.

இதுதொடர்பாக பேசியவையெல்லாம் இன்னும் அவைக் குறிப்பில் இருக்கின்றன. அவற்றிற்கு எல்லோரும் அளித்த பதில்களும் இருக்கின்றன. இதற்குக் காரணம் என்னவென்றால், மது அருந்திவிட்டு கழிவுநீர்த் தொட்டிகளில் இறங்குகிறார்கள். கழிவுநீர்த் தொட்டியைச் சுத்தம் செய்ய வரும்போதே, மது அருந்திவிட்டுத்தான் தொட்டியில் இறங்க வேண்டுமென்பதை ஒரு கொள்கைக் கோட்பாடாகவே வைத்திருக்கிறார்கள். கழிவுநீர்த் தொட்டிக்குள் இறங்கும்போது, ஆபத்தான எரிவாயு இருந்தால் அது அணைந்துவிடும் என்ற எண்ணத்தில் கற்பூரத்தைக் கொளுத்தி கீழே போடுவது, மெழுகுவர்த்தியை ஏற்றுவது போன்ற செயல்களை அந்தக் காலத்தில் செய்துகொண்டிருந்தார்கள். தற்போது, விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது. நிலவுக்கே rocket–*ஐ அனுப்பும் அளவிற்கு இப்பொழுது விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *ஊழல் செய்வதற்குக்கூட, விஞ்ஞான ரீதியாக ஊழல் செய்கிறார்கள் என்று கடந்த காலங்களில் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் வந்திருக்கின்றன. இவ்வாறு விஞ்ஞானம் வளர்ந்திருக்கின்ற காலத்திலே இப்படிப்பட்ட மரணங்கள் ஏற்படுவதற்கு என்ன காரணம்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.*

முற்பகல் 11–40

திரு. கு. செல்வபெருந்தகை: *இதற்கு நாம் என்ன வழி தேடப்போகிறோம் என்பது தொடர்பாக நம்முடைய மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கு வழங்க ஒரு திட்டத்தை வைத்திருக்கிறோம்.* IIT *போன்ற பல நிறுவனங்கள் இதை எப்படி தவிர்ப்பது என்பது குறித்து பல ஆய்வறிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, நேரமின்மை காரணமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்த ஆய்வறிக்கையை நான் சமர்ப்பிக்கிறேன்,* Parts per million (ppm) *உருவாகிறது, 100* parts per million (ppm) *இருந்தால் உயிர்ச் சேதம் இல்லை, நோய் வருகிறது; 1000* parts per million (ppm)*–க்கு மேல் போனால் உயிர்ச் சேதம் ஏற்படுகிறது, எப்படி நரம்பு மண்டலத்தைத் தாக்குகிறது என்பதைப் பற்றியெல்லாம் அந்த அறிக்கையில் இருக்கிறது. இதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சமர்ப்பிக்கிறேன். அதோடுமட்டுமல்லாமல், விஞ்ஞானம் அனைத்து வகையிலும் வளரும்பொழுது, இந்த விளிம்பு நிலை மக்கள் செய்கின்ற தொழிலான இந்த கழிவுநீர்த் தொட்டியை சுத்தம் செய்வதற்கு மட்டும் ஏன் விஞ்ஞானம் வளரவில்லை என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள், ஒரே வார்த்தையில் கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கும் சேர்த்து பதில் வழங்கிவிடுவார்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, அசோக் நிரஞ்ஜன் பகுதி தனியார் அடுக்குமாடிக் குடியிருப்பில் திரு. முத்துக்குமார் என்பவர், நேற்று 11–00 மணிக்கு கழிவுநீர்த் தொட்டியை சுத்தம் செய்யும்போது விஷ வாயு தாக்கியதால் மயக்கமடைந்துள்ளார். அவரைக் காப்பாற்றச் சென்ற திரு. குணசேகரனும் மயக்கமடைந்துள்ளார். அவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் திரு. முத்துக்குமார் உயிரிழந்திருக்கிறார். ஆகவே, உயிரிழந்த திரு. முத்துக்குமார் குடும்பத்தாருக்கு நிவாரணமும், இத்தகைய நிகழ்வுகள் நடைபெறாவண்ணம் உரிய நடவடிக்கைகளையும் அரசு எடுக்க வேண்டுமென்று, அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.*

2022 மே 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவடி மாநகராட்சி, பருத்திப்பட்டு, வார்டு எண் 47, அசோக்நிரஞ்ஜன் நகரில் உள்ள* Optima Upgrade *என்ற அடுக்குமாடிக் குடியிருப்பில் நேற்று காலை 11–00 மணி அளவில் கழிவுநீர்த் தொட்டிப் பராமரிப்புப் பணியாளர் திரு. முத்துக்குமார், வயது 28 இறந்துள்ளதாகவும், இத்தகவலின் அடிப்படையில் நேரில் சென்று விசாரணை செய்ததில்,* Optima Upgrade *என்ற அடுக்குமாடிக் குடியிருப்பில் 180 குடியிருப்புகள் உள்ளன என்றும், இவற்றிலிருந்து வெளியேறும் கழிவுநீரைச் சுத்திகரிப்பு செய்வதற்காக சுத்திகரிப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது என்றும், இந்தச் சுத்திகரிப்பு நிலைய பராமரிப்புப் பணியைச் செய்வதற்கு* Shri Paranjothi Management Solutions, *காட்டுப்பாக்கம் என்ற நிறுவனத்திற்கு அடுக்குமாடிக் குடியிருப்பு உரிமையாளர்கள்மூலம் ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது.* Shri Paranjothi Management Solutions *நிறுவனத்தின் உரிமையாளர்களாக, திரு. சக்திவேல் மற்றும் திரு. ஜெயக்குமார் ஆகியோர் உள்ளனர். இதுபோன்ற தனியார்கள் சுத்திகரிப்பு நிலையம் செல்கிறபோது, உரிய முறையில் மாநகராட்சியிடம் சொல்லி, அனுமதி பெற்றுச் சென்றிருந்தால்— அவற்றைச் சுத்தம் செய்வதற்குரிய இயந்திரங்கள் அனைத்து மாநகராட்சிகளிலும் இருக்கின்றன. அந்த இயந்திரங்களின் மூலமாகவும், மாநகராட்சியின் மேற்பார்வையாளர்கள் மூலமாகவும் அவர்களுக்குத் தெரிவித்திருந்தால், இதுபோன்ற விபத்துகள் தவிர்க்கப்பட்டிருக்கும். ஆனால், தனியார் குடியிருப்புகள், தனியார் நிறுவனங்களிடம் ஒப்பந்தத்திற்குக் கொடுக்கிறபோது, மாநகராட்சிக்குத் தெரிவிக்காமலேயே அவசரமாக பணிகளைச் செய்கிறார்கள். அவ்வாறு செய்கின்றபோதுதான் இதுபோன்ற விபத்துகள் ஏற்படுகின்றன. அவர்கள்மீது வழக்குப் பதிவு செய்து தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்ல, அவர்களை அழைத்து இன்று 11–00 மணியளவில் ஆணையர் அவர்கள் பேசியிருக்கிறார். அதற்கான இழப்பீட்டுத் தொகையை தனியார் என்ற காரணத்தால் அவர்கள்தான் தர வேண்டும். அதனையும் உடனேயே அவர்களிடமிருந்து பெற்று அந்த குடும்பத்திற்குத் தரும் பணியைச் செய்துகொண்டிருக்கிறோம். இவர்கள் முத்துக்குமார், குணசேகரன் என்று கூறுகிறார்கள்.*

[திரு. கே.என். நேரு] [2022 மே 6

திரு. குணசேகரன் நிறுவனத்தில் பணிபுரியும் மேலாளர். மேலாளரும் மயங்கி விழுந்துள்ளார். அதுகுறித்து தீயணைப்பு நிலையத்திற்குச் சொல்லி அனுப்பி, தீயணைப்பு நிலையத்தினர் வந்து, அவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு செல்கிறபோதுதான், ஒருவர் இறந்துவிட்டார், ஒருவர் மயக்க நிலையிலிருந்து சிகிச்சை பெற்று வருகிறார். எனவே, பொதுப்படையாக தனியார் நிறுவனங்கள் மூலம் தனியார் அடுக்குமாடியில் குடியிருப்பவர்கள் இதுபோன்ற பணிகளைச் செய்கிறபோது, மாநகராட்சியிடம் அனுமதி பெற்றால், மாநகராட்சியில் இவற்றுக்காக தனி இயந்திரங்கள் இருக்கின்றன; அதற்கான மேற்பார்வையாளரும் இருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இவற்றை எப்படித் தடுப்பது என்று கேட்டார். இவற்றை இயக்குவதற்கு தனி உபகரணங்கள் இருக்கின்றன. மாநகராட்சிக்குத் தெரியாமலே செய்கிறபோதுதான் இதுபோன்ற விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, இதற்காக அவர்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தக் குடும்பத்திற்கு அனைத்து வகையிலும் உதவிகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இன்று காலை பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. திருவேங்கடம் என்பவர் வயது 56, மயானத்தில் பணிபுரிகிறபோது இறந்திருக்கிறார் என்ற செய்தி பத்திரிகையில் வெளி வந்திருக்கிறது. அவரும் நீண்டகாலமாக நோயாளியாக இருந்து, எப்போதும் பணிக்கு வராமல், எப்போதாவது பணிக்கு வந்தாலும், குடிப் பழக்கத்தோடு வருபவராக இருந்திருக்கிறார். அவ்வாறான சூழ்நிலையில் நேற்றைக்கு பணிக்கு வந்தபோது, அவர் மயங்கி விழுந்திருக்கிறார். அவரை மருத்துவமனைக்கு தூக்கிச் சென்று சேர்த்தபோது, அவரும் இறந்திருக்கிறார். பத்திரிகைச் செய்தியில் பார்த்தபோது அவரும் மயானத்தில் விஷவாயு தாக்கி இறந்திருக்கிறார் என்று வந்திருக்கிறது. அது உண்மை அல்ல. அவர் மதுப் பழக்கத்தால்தான் இறந்திருக்கிறார். மருத்துவமனையின் சான்றிதழ் அதைத்தான் தெரிவித்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்ற செயல்கள் நடைபெறாமல் இருக்க அனைத்து மாநகராட்சிகளுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பதற்குரிய அறிக்கைகள் தரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.